

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி அமைச்சர் பி.கே.சேகர்பாபு திரு.வி.க.நகர் சட்டமன்றத் தொகுதி, புளியந்தோப்பு, வெங்கடேசபுரம் புதிய காலனியில் உள்ள பொது நூலகத்தை சி.எம்.டி.ஏ. சார்பில் "முதல்வர் படைப்பகம்" அமைப்பதற்கான பணிகளை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், மேயர் திருமதி.ஆர்.பிரியா, தாயகம் கவி எம்.எல்.ஏ., முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், உயர் அலுவலர்கள் அ.சிவஞானம், எச்.ஆர்.கௌஷிக், மண்டலக் குழுத்தலைவர் திருமதி. சரிதா மகேஷ்குமார், தலைமைத் திட்ட அமைப்பாளர் எஸ்.ருத்ரமூர்த்தி, பொறியாளர்கள் மகாவிஷ்ணு, பாலமுருகன், ராஜன்பாபு, இணை இயக்குநர் இளங்கோ சந்திரகுமார், அலுவலர்கள் முனைவர் மு.கவிதா, சரவணன், மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.



திருவள்ளூர் மத்திய மாவட்ட இளைஞர் அணி சார்பில் ஆவடி தொகுதி பாக இளைஞர்களுக்கு சமூக ஊடக பயிற்சி பாசறை கூட்டம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.சுரேஷ்குமார் ஏற்பாட்டில் பட்டாபிராம் பகுதியில் நடைபெற்றது இதில் மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு பயிற்சி கூட்டத்தை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். உடன் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, இளைஞரணி மாநில துணைச் செயலாளர் ப.அப்துல்மாலிக், பிரபு கஜேந்திரன், சூர்யா கிருஷ்ணமூர்த்தி, விக்னேஷ் ஆனந்த், சி.ஜெரால்டு, மா.இராஜ், எஸ்.ஜெயபாலன், பா.நரேஷ்குமார், மேயர் ஜி.உதயகுமார், சன்.பிரகாஷ், ஜி.நாராயண பிரசாத், ஜி.ராஜேந்திரன், பேபிசேகர், பொன்.விஜயன், டி.தேசிங்கு, என்.இ.கே.மூர்த்தி, ஆர்.செந்தாமரை, ஜி.சி.சி.கருணாநிதி, வி.ஜெ.உமாமகேஸ்வரன், அக்னி ராஜேஷ், ஏ. டி.பிரியாகுமார், ,எஸ்.சதீஷ்குமார், ஜி.துர்கா பிரகாஷ், உள்பட இளைஞர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

### குறைந்த அளவே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது!

# தமிழ்நாடு சுற்றுலாத் துறையை மீட்க அளித்த நிதி எவ்வளவு?

## மக்களவையில் - டி.ஆர்.பாலு கேள்வி!

புதுடெல்லி, ஆக.5-

தமிழ்நாடு, உத்தரப்பிரதேசம், மகாராஷ்டிரா, காஷ்மீர், கேரளா உள்ளிட்ட மாநிலங்களில் சுற்றுலாத் துறையை மீட்கத் தேவையான நிதி உதவியும் சிறப்பு திட்டங்களையும் ஒன்றிய அரசு அளித்துள்ளதா? கோவிட் 19 தாக்குதலில் இருந்து விடுபட சுற்றுலாவுக்கு என்னென்ன நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன? என்று நாடாளுமன்ற மக்களவையில் தி.மு.க. குழுத்தலைவரும், திருப்பெரும்புதூர் தொகுதி எம்.பி.யுமான டி.ஆர்.பாலு அவர்கள் வினா எழுப்பினார்.

இந்த கேள்விக்கு நேற்று (4.8.2025) மக்களவையில் எழுத்துப்பூர்வமாக தெரிவித்த பதிலில் ஒன்றிய சுற்றுலாத் துறைக்கான அமைச்சர் கஜேந்திர சிங் செகாவத் கூறியதாவது:-



“சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கான அடிப்படைப் பொறுப்பு மாநில அரசுகள் வசம் இருந்த போதிலும் ஒன்றிய அரசு பல்வேறு திட்டங்கள் வாயிலாக நிதி உதவி வழங்கி வருகிறது. “சுதேச தரிசனம்” மற்றும் “சிறப்பு முதலீட்டு உதவி” போன்றவை இத்திட்டங்களில் அடங்கும்.

### பத்தாண்டுகளில் தமிழ்நாட்டுக்கு ரூ.354 கோடி நிதி!

2014-15 முதல் அனைத்து மாநிலங்களிலும் கடற்கரை சர்க்யூட், தலைசிறந்த சுற்றுலா தலங்கள் மேம்பாடு, போன்ற திட்டக்கூறுகளுக்காக மத்திய அரசு மொத்தம் ரூ.13,070 கோடி நிதி உதவி அளித்துள்ளது. இதில் மாமல்லபுரம், ராமேஸ்வரம் உள்ளிட்ட புகழ்பெற்ற நகர்களில் சுற்றுலாவை வளர்க்கவும், சுற்றுலாப்பயணிகள் மற்றும் பக்திப் பயணியர் வசதிகளை மேம்படுத்த மொத்தம் 333 கோடி ரூபாய் நிதி உதவி வழங்கப் பட்டுள்ளது.

2016-17 நிதி ஆண்டில் ரூ.73.13 கோடி ரூபாய் கோஸ்டல் சுற்றுலா சர்க்கியூட் வளர்ச்சி திட்டத்துக்காக இந்த தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதன் பின் (ஆறு ஆண்டுகள் கழித்து) 2023-24, 24-25-ஆம் ஆண்டுகளில் மீண்டும் நிதி உதவி ஒன்றிய அரசால் வழங்கப் பட்டது.

மேலும் மாமல்லபுரம், மதுரை உள்ளிட்ட நகர்களில் சுற்றுலா விழாக்கள், அருங்காட்சி போன்ற நிகழ்ச்சிகளுக்கு 1.55 கோடி ரூபாய் வழங்கப்பட்டது.

### கோவிட் பாதிப்பிலிருந்து மீள நிவாரணம்!

கோவிட் பெருந்தொற்றினால் கடும் பாதிப்புக்கு ஆளான சுற்றுலா துறைக்கு ஆதரவு அளிக்கும் நோக்கில் இந்தியா வந்த முதல் 5 லட்சம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு விசா கட்டண விலக்கு தரப்பட்டது. மேலும் 171 நாடுகளுக்கு சுற்றுலா விசா அளிப்பது மீண்டும் கொண்டுவரப்பட்டது.

சுற்றுலாத் தொழில் துறை பணியாளர்களுக்கு வருங்கால வைப்புநிதி செலுத்துவதில் விலக்கு பல்வேறு சலுகைகளுடன் முகவர்கள், நிறுனங்களுக்கு ரூ.பத்து லட்சம் வரை கடன் உறுதி உள்ளிட்ட சலுகைகள் ஒன்றிய அரசால் அளிக்கப்பட்டது.”

இவ்வாறு தனது பதிலில் ஒன்றிய சுற்றுலா அமைச்சர் தெரிவித்தார்.

### தமிழ்நாட்டுக்கு சுற்றுலா நிதி 2.7 விழுக்காடு மட்டுமே!

இந்தியாவிலேயே தமிழ்நாடு சுற்றுலா பயணிகள் வருகையைப் பொறுத்த வரை முதலாம் இடத்தில் இருக்கிறது. ஆனால், ஒன்றிய அரசு தமிழ்நாட்டில் சுற்றுலாத் துறை வளர்ச்சிக்கு சென்ற பத்து ஆண்டுக் காலத்தில் அளித்த நிதி இந்தியாவின் அனைத்து மாநிலங்களுக்குமான ஒட்டு மொத்த ஒதுக்கீட்டில் வெறும் 2.7 சதவீதம் மட்டுமே என்பதும், 2016-17-க்குப் பின் ஆறு ஆண்டுகள் எந்த நிதி உதவியும் தமிழ்நாட்டுக்கு ஒன்றிய அரசு வழங்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 166 வது நாள்!

## எழும்பூர் வடக்குப் பகுதியில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை, ஆக. 5 -

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 166 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (04.08.2025), எழும்பூர் வடக்கு பகுதி: 1) வட்டம் 77 அ, மோதிலால் தெரு, விநாயகர் கோயில் அருகில், புளியந்தோப்பு. 2) வட்டம் 78அ, குறவன் குளம், சூளை, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்



பாபு வழிகாட்டுதல்படி “தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் சொ. வேலு, வி.சுதாகர், பி.எம். யாழினி, கோ.ஏகப்பன், கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, கே.எஸ்.எம். நாதன், புனிதவதி எத்திராசன், கோ.மணி, நிர்மலா தேவி. மாமன்ற உறுப்பினர்கள்: பி.சுமதி, ராஜேஸ்வரி ஸ்ரீதர், பரிதிஇளம்சுருதி, ஜி. தாமோதரன், பகுதி செயலாளர்கள்: வி.அபாய், தி. தயாளன், சு.மனோகர், ந.பாலு, ஆர்.எம்.ரங்கநாதன், சி. சேகர், வி.விஜயகுமார், ஆர். பாபு, டால்வின் எஸ்.அரிகிருஷ்ணன், இ.மொய்தீன், வான்மதி கதிரவன், எல்.சுந்தர்ராஜன். இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: எஸ். முரளி, ஆர்.ராஜன், கே.ஆர். அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாளை முன்னிட்டு

# தாரமங்கலத்தில் கழகத்தினர் பெருந்திரளாக பங்கேற்று புகழ் அஞ்சலி செலுத்துவீர்!

## மாவட்டச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. அறிக்கை!



ஆகஸ்ட் 7 ஆம் தேதி வியாழக்கிழமை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7 ஆம் ஆண்டு நினைவு நாள். திராவிட இயக்கத்தின் பாதுகாவலராக, தமிழினத்தில் அழியா சொத்தாக, ஐந்து முறை தமிழகத்தின் முதலமைச்சராக, உலகமே போற்றும் பன்முகத் தலைவர் செம்மொழி நாயகராக நம் நெஞ்சமெல்லாம் நிறைந்து நிற்கும் நம் குடும்பத் தலைவரின் நினைவுநாள்.

தமிழே மூச்சாக - தமிழர் நலமே வாழ்வாகக் கொண்டு இன உணர்வு, மொழி உணர்வு, சமூக நீதி, தீண்டாமை ஒழிப்பு, வறுமை ஒழிப்பு, பெண்கள் முன்னேற்றம், சாதி ஒழிப்பு என வராற்றில், பொது வாழ்வில் உலக அளவில் அனைவருக்கும் முன் உதாரணமாகத் திகழ்ந்த நம் குடும்பத் தலைவருக்கு நினைவு நாள். மாபெரும் தலைவருடைய நினைவு நாளை முன்னிட்டு கழகத் தலைவர் தளபதி அவர்களின் ஆணைப்படி வருகிற 7 ஆம் தேதி சேலம் மேற்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் கழகம் மற்றும் கழக உடன் பிறப்புகள் அனைவரது இல்லத்தின் வாயிலில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலையிட்டு - மலர்தூவி புகழ் அஞ்சலி செலுத்திட வேண்டும். முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் நம்மை விட்டு மறைந்தாலும் நம் நெஞ்சங்களிலும், நினைவுகளிலும் நிரந்தரமாகக் குடிகொண்டிருக்கும் தமிழினத் தலைவருக்கு வீடுகள் தோறும் மரியாதை செலுத்திடுவோம்.

07-08-2025 தேதி வியாழக்கிழமை காலை 08.30 மணியளவில் தாரமங்கலத்தில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாலை அணிவித்து புகழ் அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதுசமயம் சேலம் மேற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், இந்நாள் - முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், வார்டு, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், இந்நாள்-முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், பாகநிலை முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC), பூத் டிஜிட்டல் ஏஜென்ட் (BDA), கழக முன்னோடிகள், மற்றும் கழக உடன் பிறப்புகள் என அனைவரும் பெரும் திரளாக கலந்து கொள்ள வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**டி.எம்.செல்வகணபதி எம்.பி.**
செயலாளர், சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க.

# சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் - பகுதிக் கழகச் செயலாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர்- அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் ,பகுதிக் கழகச் செயலாளர்கள், வட்டக் கழகச்செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (05.08.2025-செவ்வாய்க்கிழமை) மாலை 6.30 மணியளவில் சென்னை, ஓட்டேரி, ஸ்டாரன்ஸ் சாலை, எம்.கே.டி. மஹாலில் அவைத்தலைவர் கோ.ஏகப்பன் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில நிர்வாகிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள்,இந்நாள்முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள்,தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தொகுதி பார்வையாளர்கள்,பகுதிக் கழகச் செயலாளர்கள்.. ,பொதுக்குழு உறுப்பினர்கள், மண்டலக் குழுத் தலைவர்கள்,மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: ஆகஸ்ட்.7 முத்தமிழறிஞர் நினைவு நாள்

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு**
செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

### இவ்வாண்டு பி.எட். மாணவர்கள் சேர்க்கை இணையவழியில் நடத்த அறிவிக்கப்பட்டு விண்ணப்பங்கள் பெறப்பட்டது

# மாணாக்கர்கள் இணைய வழியிலேயே விரும்பும் கல்லூரியினை தேர்வு செய்யலாம்!

## உயர்கல்வித் துறை அமைச்சர் – முனைவர் கோவி.செழியன் தகவல்

**சென்னை, ஆக. 5 -**

**2025- 26 ஆம் கல்வியாண்டிற்கான அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்வியியல் கல்லூரி (பி.எட்) மாணாக்கர் சேர்க்கை விருப்பப்பாடங்கள் மற்றும் கல்லூரிக்கான இணைய வழியில் மாணாக்கர் தேர்வு செய்யலாம் என உயர்கல்வித் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.**



இது குறித்து உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் தெரிவித்துள்ளதாவது:

கடந்த ஆண்டுகளில் பி.எட். மாணாக்கர் சேர்க்கை நேரடி கலந்தாய்வின் மூலம் நடைபெற்று வந்தது. இதனால் வெளி ஊர்களில் இருந்து மாணாக்கர்கள தங்களுடைய பெற்றோர்களுடன் சென்னைக்கு வந்து கலந்தாய்வில் கலந்து கொள்ளும் நிலை நேரிட்டது. இந்த சிரமங்களைப் போக்க முதலமைச்சரின் அறிவுறுத்தலுக்கிணங்க அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்வியியல் கல்லூரிகளில் 2025-2026 ஆம் கல்வியாண்டிற்கான தமிழ்நாடு பி.எட். மாணாக்கர் சேர்க்கை இணைய வழியில் நடத்திட முடிவெடுக்கப்பட்டது. அதன்படி, விண்ணப்பங்கள் 20.06.2025 முதல் 21.07.2025 வரை இணைய வழியில் பெறப்பட்டன. 557 ஆண்கள் 2983 பெண்கள் மற்றும் 5 மூன்றாம் பாலினத்தவர் என மொத்தம் 3545 நபர்களின் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. பின்னர் 31.07.2025 அன்று தரவரிசைப் பட்டியல் இணையதளத்தில் வெளியிடப்பட்டது. தமிழ்நாட்டில் உள்ள 7 அரசு கல்வியியல் கல்லூரிகளில் 900 இடங்களும், 14 அரசு உதவிபெறும் கல்லூரிகளில் 1140 இடங்கள் என 21 கல்வியியல் கல்லூரிகளில் 2040 இடங்கள் உள்ளன. இணைய வழியில் 04.08.2025 பிற்பகல் 1.00 மணி முதல் 09.08.2025 மாலை 5.00 வரை மாணாக்கர்கள் தங்கள் விரும்பும் கல்லூரியைத் தேர்வு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. தங்கள் உள்நுழைவு ID மூலம் www.lwiase.ac.in என்ற இணையதளம் வாயிலாக தங்கள் விருப்ப கல்லூரியைத் தேர்வு செய்யலாம்.

இவ்வாறு உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் தெரிவித்துள்ளார்.

### கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாட்டில்

# புதிதாக திறக்கப்பட்ட பொதுத்துறை வங்கிகளின் எண்ணிக்கை என்ன?

## மக்களவையில் - ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 5 -

தமிழ்நாடு மற்றும் மகாராஷ்டிராவின் கிராமப்புறப் பகுதிகளில், குறிப்பாக தமிழ்நாட்டின் வேலூர் மாவட்டத்தில் உள்ள அணைக்கட்டு, கே.வி.குப்பம், வாணியம்பாடி, ஆம்பூர் மற்றும் குடியாத்தம் வட்டாரங்களில் பொதுத் துறை வங்கிக் கிளைகள் மற்றும் ஏ.டி.எம்.கள் உள்ளதா என்பதை அரசு ஆய்வு செய்துள்ளதா?, அப்படியெனில், வங்கிக் கிளைகளைத் திறப்பதற்கான தூரம் அல்லது மக்கள் தொகை வரம்புகள் குறித்து அரசுக்கு ஏதேனும் பரிந்துரைக்கப்பட்ட விதிமுறைகள் அல்லது வழிகாட்டுதல்கள் உள்ளதா, மற்றும் அதன் விவரங்கள் என்ன? கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாட்டின் தாராபுரம் சட்டமன்றத் தொகுதியில் இந்த விதிமுறைகளின் கீழ் திறக்கப்பட்ட புதிய பொதுத் துறை வங்கிகளின் எண்ணிக்கை மற்றும் அக்கிளைகளின் பெயர்கள் என்ன? என ஈரோடு தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ் கேள்வி எழுப்பினார்.

தாராசிவ் மாவட்டத்தில் உள்ள 60 கிராமங்களில் புதிய வங்கிக் கிளைகளைத் திறக்க மகாராஷ்டிராவிலிருந்து அரசு பெறப்பட்ட முன்மொழிவுகளின் எண்ணிக்கை மற்றும் அதில் எத்தனை முன்மொழிவுகள் அங்கீகரிக்கப்பட்டன? வங்கி உள்கட்டமைப்பில் உள்ள கடுமையான இடைவெளி காரணமாக, Jan Dhan, DBT மற்றும் PMJJBY போன்ற திட்டங்களில் இருந்து மக்கள் நீக்கப்படுவது குறித்து அரசு ஒப்புக்கொள்கிறதா? அப்படியெனில், இதை சரிசெய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? இந்த பகுதிகளில் டிஜிட்டல் இடைவெளியைக் குறைக்க India Post Payment Bank அல்லது Mobile Banking வேன்களைப் பயன்படுத்த அரசுக்கு ஏதேனும் திட்டங்கள் உள்ளதா? அப்படியெனில் அதன் விவரங்கள், அதற்கான காலக்கெடு மற்றும் பட்ஜெட் ஒதுக்கீடு என்ன?

என்று மக்களவையில் நிதி அமைச்சரிடம் ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர், கழக இளைஞர் அணி துணை செயலாளர் கே.இ.பிரகாஷ் கேள்வி எழுப்பியுள்ளார்.



ஒன்றிய நிதித்துறை இணை அமைச்சர் பங்கஜ் சவுத்ரி அளித்த பதில் வருமாறு ; நாட்டின் அனைத்து மக்கள் வசிக்கும் கிராமங்களிலும் 5 கிலோ மீட்டர் தொலைவிற்குள் வங்கி சேவை மையம் (Bank Branch Business Correspondent India Post Payments Bank) முயற்சி வங்கி சேவை மையங்களின் இருப்பிடம், Geographic Information System (GIS) வழியாக Jan Dhan Darshak (JDD) என்ற செயலி மூலம் கண்காணிக்கப்படுகிறது. வங்கிகளால் JDD செயலியில் பதிவேற்றப்பட்ட தரவுகளின் அடிப்படையில், நாட்டில் உள்ள மொத்தம் 6,01,328 மக்கள் வசிக்கும் கிராமங்களில் (Inhabited Villages), 6,00,803 (99.91%) , 5 சுற்றளவில் இணைக்கப்பட்டுள்ளன. 30.06.2025 நிலவரப்படி, JDD செயலியில் உள்ளபடி மகாராஷ்டிரா மாநிலத்தில் 7,593 வங்கி கிளைகளும், தமிழ்நாட்டில் 6,397 வங்கி கிளைகளும், மகாராஷ்டிரா மாநிலத்தில்11, 604 ஏடிஎம்கள், தமிழ்நாட்டில் 13,374 ஏடிஎம்கள் உள்ளன.

தாராசிவ் மாவட்டத்தில் உள்ள 60 கிராமங்களில் புதிய வங்கிக் கிளை திறப்பு குறித்து சமீபத்தில் எந்தவொரு முன்மொழிவும் பெறப்படவில்லை என்று SLBC, மகாராஷ்டிரா தெரிவித்துள்ளது. இருப்பினும், செப்டம்பர் 2023ல் தாராசிவ் மாவட்ட ஆட்சியரிடமிருந்து அம்மாவட்டத்தில் உள்ள 41 இடங்களில் வங்கிக் கிளைகளைத் திறக்க ஒரு கோரிக்கை பெறப்பட்டது. அந்த 41 இடங்களும் ஏற்கனவே ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வங்கி சேவை மையங்களுடன் இணைக்கப் பட்டுள்ளதாக ஆய்வில் கண்டறியப்பட்டது. மேலும், கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாட்டின் தாராபுரம் சட்டமன்றத் தொகுதியில் எந்தவொரு புதிய பொதுத்துறை வங்கிக் கிளையும் திறக்கப் படவில்லை. புதிய வங்கிக் கிளைகளைத் திறப்பதற்கான முன்மொழிவு களின் தரவு ஒன்றிய அளவில் பராமரிக்கப்படவில்லை. தமிழ்நாடு மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களில், IPPB வங்கி சேவைகள் வழங்க தபால் நிலையங்களை பயன் படுத்துகிறது. தமிழ்நாட்டில் சுமார் 11,855 தபால் நிலையங்கள், மகாராஷ்டிராவில் 14.020 தபால் நிலையங்கள் வங்கி சேவைக்கான மையங்களாக உள்ளன. IPPB கிராமப்புறங்களில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு வீட்டிற்கே சென்று சேவைகளை வழங்குவதன் மூலம் டிஜிட்டல் இடைவெளியைக் குறைக்க உதவி வருகிறது என்று கூறினார்.



திருவள்ளூர் மாவட்டம் இரா.கி.பேட்டை ஒன்றியம் எஸ்.வி.ஜி.புரம் சமுதாயக் கூடத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாமில் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ குடும்ப அட்டை, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, பட்டா மாற்றம் என 46 அரசு சேவைகளுக்கு பொதுமக்கள் மனு அளித்ததும் உடனடியாக MGNREGA திட்டத்தின் கீழ் வேலை அட்டை , கர்ப்பிணிப் பெண்களுக்கு அரசு வழங்கும் ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரப் பொருட்கள் அடங்கிய தொகுப்பு உள்ளிட்டவைகளை வழங்கினார். உடன் ஒன்றிய செயலாளர்கள் பா. சம்பத், சி.என்.சண்முகம், பெ.பழனி, மா.இரகு, அதிகாரிகள் சரஸ்வதி, கலைச்செல்வி, நிர்வாகிகள் சத்யராஜ், நாகப்பன், திருவேங்கடம், வெங்கடேஷ், நவீன் குமார், டில்லி பாபு, பிச்சாண்டி, சிரஞ்சீவிலு, திலகவதி ரமேஷ், செங்குட்டவன், சரவணன், வி.ஜி.மோகன், எஸ்.மாத்தையா, நவீன், உட்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்